இந்துக்களுக்கு எதிரான போக்கை கடைபிடிக்கும்

காங்கிரஸை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்

● மக்களவையில் பிரதமர் மோடி கடும் விமர்சனம்

● புதுடெல்லி

இந்துக்களுக்கு எதிரான போக்கை கடைபிடிக்கும் காங்கிரஸ் உள்ளிட்ட இண்டியா கூட்டணியை 140 கோடி மக்களும் மன்னிக்க மாட்டார்கள். 2029 மக்களவை தேர்தலிலும் காங்கிரஸ் எதிர்க்கட்சிகள் வரிசையிலேயே அமரும் என்று மக்களவையில் பிரதமர் மோடி கடுமையாக விமர்சித்தார்.

கடந்த 27-ம் தேதி நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றினார். இதைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் கடந்த 1-ம் தேதி தொடங்கியது. அன்றைய தினம், ஆளும் பாஜக மீது எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தினார். இந்து என்று சொல்லிக் கொள்ளும் பாஜகவினர் வன்முறை, வெறுப்பை மட்டுமே பரப்புவதாக கடுமையாக விமர்சித்து அவர் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்துக்கு பிரதமர் மோடி நேற்று பதில் அளித்தார். அவர் பேசத் தொடங்கியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டு, கோஷமிட்டனர். மணிப்பூருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று தொடர்ந்து குரல் எழுப்பினர். இதனால், அவையில் குழப்பம் நீடித்தது. இதனால், எதிர்க்கட்சி உறுப்பினர்களை மக்களவை தலைவர் ஓம் பிர்லா கடுமையாக கண்டித்தார். "எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பேச ஒன்றரை மணி நேரம் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அப்போது அவை உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காத்தனர். அந்த மரபை எதிர்க்கட்சியினர் கடைபிடிக்க வேண்டும்" என்று ஓம் பிர்லா அறிவுறுத்தினார். இதை ஏற்க மறுத்த எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கோஷமிட்டனர்.

அமளிக்கு நடுவே பிரதமர் மோடி பேசியதாவது:

வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்குவது குறித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது உரையில் தெளிவாக குறிப்பிட்டார். பல்வேறு முக்கிய விவரங்களையும் எடுத்துரைத்தார். அவருக்கு எனது நன்றி.

கடந்த 1-ம் தேதி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை அவையில் எடுத்துரைத்தனர். இதில் புதிய உறுப்பினர்கள் கண்ணியத்துடன் நடந்து கொண்டனர். அவர்களை பாராட்டுகிறேன்.

கடந்த 10 ஆண்டுகளில் நாங்கள் எவ்வாறு திறம்பட பணியாற்றினோம் என்பது மக்களுக்கு தெரியும். ஏழைகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இதன் காரணமாக, சுமார் 30 கோடி பேர் வறுமையின் பிடியில் இருந்து மீண்டுள்ளனர். இதனாலேயே 3-வது முறையாக சேவையாற்ற நாட்டு மக்கள் எங்களுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதில் சிலருக்கு வருத்தம் இருக்கிறது. தோல்வியை தழுவிய அவர்கள் தொடர்ச்சியாக உண்மைக்கு மாறான தகவல்களை பரப்பி வருகின்றனர்.

அனைவருக்கும் சமநீதி

கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதனால், உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு பன்படங்கு உயர்ந்தது. நாட்டின் நலனை முன்னிறுத்தி மட்டுமே முடிவுகள் எடுக்கப்பட்டன. நம் நாட்டில் மிக நீண்ட காலமாக வாக்கு வங்கி அரசியல் நீடித்து வந்தது. இது நாட்டின் வளர்ச்சியை அழித்தது. நாங்கள் 'சர்வ தர்ம சம பாவ்' கொள்கையை பின்பற்றுகிறோம். இதன்படி அனைவருக்கும் சமநீதி கிடைப்பதை உறுதி செய்கிறோம். மத்திய அரசின் திட்டம் கடைநிலை மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதை இலக்காக கொண்டு செயல்படுகிறோம்.

3 மடங்கு வேகத்தில்..

மக்களவை தேர்தலின்போது, 'வளர்ச்சி அடைந்த பாரதம்' என்ற லட்சிய கொள்கையை முன்னிறுத்தி மக்களை சந்தித்தோம். மக்களின் ஆதரவால் 3-வது முறையாக மத்தியில் ஆட்சி அமைத்திருக்கிறோம். 3-வது ஆட்சியில் 3 மடங்கு வேகத்தில் பணியாற்றுவோம்.

அமெரிக்காவின் சிகாகோ நகரில் 131 ஆண்டுகளுக்கு முன்பு உரையாற்றிய சுவாமி விவேகானந்தர், இந்துக்களின் சகிப்புத்தன்மை குறித்து உலகுக்கு எடுத்துரைத்தார்.

ஆனால், இப்போது காங்கிரஸ் தலைவர்களோ, 'இந்து தீவிரவாதம்' என்ற கோஷத்தை எழுப்புகின்றனர்.

இண்டியா கூட்டணியை சேர்ந்தவர்கள், சனாதன தர்மத்தை கொசுவை போல ஒழிக்க வேண்டும் என்கின்றனர். இந்து கடவுள்களை அவமதிக்கின்றனர். இந்துக்களுக்கு எதிரான போக்கை கடைபிடிக்கும் காங்கிரஸ் உள்ளிட்ட இண்டியா கூட்டணியை 140 கோடி மக்களும் மன்னிக்க மாட்டார்கள். வரும் 2029-ம் ஆண்டு மக்களவை தேர்தலிலும் காங்கிரஸ் எதிர்க்கட்சிகள் வரிசையிலேயே அமரும்.

சுதந்திர போராட்ட காலத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடினர். இதன்காரணமாக நாடு விடுதலை அடைந்தது. மக்கள் சுதந்திர காற்றை சுவாசித்தனர். இப்போது வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். விரைவில் 3-வது மிகப்பெரிய பொருளாதார நாடு என்ற இலக்கை எட்டுவோம்.

இவ்வாறு பிரதமர் பேசினார்.

இதைத் தொடர்ந்து, மக்களவை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. மாநிலங்களவையில் பிரதமர் மோடி இன்று பதில் அளிக்கிறார். இதன்பிறகு, மாநிலங்களவையும் காலவரையின்றி ஒத்திவைக்கப்படும்.

↑ மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்துக்கு பதிலளித்து பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். படம்: பிடிஐ

பிரதமர் நரேந்திர மோடியின் 3 குட்டி கதைகள்

பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் பேசியபோது எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் பெயரைக் குறிப்பிடாமல் 3 குட்டி கதைகளை கூறி அவரை விமர்சித்தார். பிரதமர் மோடி கூறியதாவது:

ஒரு சிறுவன் மிதிவண்டி ஓட்டிச் செல்கிறான். அப்போது அந்த சிறுவன் கீழே விழுந்து அழுது புலம்புகிறான். பெரியவர்கள் அந்த இடத்துக்கு வந்து சிறுவனை சமாதானப் படுத்துகின்றனர். ஓர் எறும்பு உயிரிழந்து விட்டது. ஒரு பறவை உயிரிழந்துவிட்டது என்று சிறுவனிடம் பெரியவர்கள் கூறுகின்றனர். இதைக் கேட்டு சிறுவன் மகிழ்ச்சி அடைகிறான். இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான விளையாட்டு இப்போது அவையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரு சிறுவன் 99 மதிப்பெண்களை பெற்றுவிட்டதாக துள்ளிக் குதிக்கிறான். அவனுக்கு பலரும் வாழ்த்துகளை கூறுகின்றனர். அப்போது சிறுவனின் ஆசிரியர் உண்மையை கூறுகிறார். அந்த சிறுவன், 100–க்கு 99 மதிப்பெண்களை பெறவில்லை. 543–க்கு 99 மதிப்பெண்களை பெற்றிருக்கிறார் என்று ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

பள்ளியில் இருந்து வீடு திரும்பிய ஒரு குழந்தை, யாரோ தன்னை அடித்து விட்டதாக தாயிடம் கூறி அழுகிறது. ஆனால் அந்த குழந்தைதான் அடுத்த குழந்தையின் புத்தகம், உணவை திருடியது. இதேபோல மக்களவையில் திங்கள்கிழமை சிறுபிள்ளைதனமான நடவடிக்கைகள் அரங்கேறின. அனுதாபத்தை பெற புதிய நாடகம் அரங்கேற்றப்பட்டது. ஆனால் மக்களுக்கு உண்மை தெரியும். பல கோடி ரூபாய் ஊழல் வழக்கில் ஜாமீனில் இருப்பவர், அவையில் அபத்தமான குற்றச்சாட்டுகளை சுமத்துகிறார்.

இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

Rane

ரானே பிரேக் லைனிங் லிமிடெட்
CIN: L63011TN2004PLC054948
பதிவுபெற்ற அலுவலகம்: "மைத்ரி", எண்.132, கதீட்ரல் ரோடு, சென்னை–600086
Tel.: 044 2811 2472 / 73 | www.ranegroup.com | e-mail: investorservices@ranegroup.com

நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

தலைப்பு: முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF) ஆணையத்திற்கு ஈக்விட்டி பங்குகள் கட்டாய மாற்றம்

2013, நிறுவனங்கள் சட்டம், பிரிவு 124 (6) உடன் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கில், தணிக்கை மாற்றம் மற்றும் பணத்தை திருப்பிச் செலுத்தல்) விதிமுறைகள், 2016 (விதிகள்) என்பதன்படி அறிவிக்கப்படுவது என்னவென்றால், பங்குதாரர்கள் அவர்களுடைய ஈவுத்தொகையை ஏழு தொடர்ச்சியான ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக, கோரப்படாத அல்லது செலுத்தப்படாத நிலையில் இருந்தால் அவர்களுடைய பங்குகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF) ஆணையத்திற்கு நிறுவனம் மாற்ற வேண்டும்.

விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க, ஈவுத்தொகை உரிமை கோரப்படாத மற்றும் பங்குகள் மாற்றப்பட வேண்டிய பங்குதாரர்களுக்கு தனிப்பட்ட தகவல் தொடர்புகள் அனுப்பப்பட்டு, அத்தகைய பங்குதாரர்களின் விவரங்கள் மற்றும் பங்குகளின் எண்ணிக்கையுடன், www.ranegroup.com என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. IEPF ஆணையத்திற்கு மாற்றப்பட வேண்டிய பங்குகள் மற்றும் பணமாக்கப்படாத ஈவுத்தொகை விவரங்களை சரிபார்க்க பங்குதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2016-17 வருடத்திற்கு IEPFக்கு மாற்ற வேண்டிய இறுதியான ஈவுத்தொகை மற்றும் அதனுடன் தொடர்புடைய பங்குகளுக்கு 2024 செப்டம்பர் 29-ஆம் தேதிக்கு பின் 30 நாட்களுக்குள்ளாக என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஈவுத்தொகையை பெற வேண்டிய சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள், இந்நிறுவனம் அல்லது இந்நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் மாற்ற முகவரைத் தொடர்பு கொண்டு ஒரு விண்ணப்பத்தை சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

இது சம்பந்தமான பங்குதாரர்களிடமிருந்து வரும்பு தேதி வரையில் எந்தத் தகவலும் பெறப்படவில்லையெனில் IEPF விதிமுறைகளின்படி, தேவையான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், பங்குகளை IEPF ஆணையத்திற்கு இவ்வாறு மாற்றப்படும்:

(i) சான்றிதழ் அல்லாத மின்னனு வடிவில் பங்கு வைத்திருக்கும் பங்குதாரர்கள் கவனிக்க: IEPF ஆணையத்திற்கு மின்னனு கணக்கிற்கு பங்குகள் நேரடியாக அனுப்பப்படும்.

(ii) சான்றிதழ் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள்: புதிய சான்றிதழ்களை வழங்கி மின்னனு வடிவில் மாற்றி IEPF ஆணையத்திற்கு மின்னனு கணக்கிற்கு மாற்றப்படும்.

IEPF விதிகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்களை கருத்தில் கொண்டு, புதிய பங்கு சான்றிதழ்(கள்) வழங்குதல் தொடர்பான நிறுவனத்தின் போதுமான அறிவிப்பாகவும் கருதவேண்டும்.

அதன்பின்னர் கூறப்பட்ட விதிகளுக்கு ஏற்ப IEPF–க்கு பரிமாற்றம் செய்யப்பட்டுள்ள ஈவுத்தெகை மற்றும் பங்குகள் தொடர்பாக கம்பெனிக்கு எதிராக எந்தவிதமான உரிமைகோரலும் ஏற்கப்படாது. IEPF ஆணையத்திற்கு மாற்றப்பட்ட உரிமை கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் அதன் தொடர்பான பங்குகள் அப்பங்குகளில் கிடைக்கப்பெறும் நன்மைகள் ஏதேனும் இருந்தால் IEPF ஆணையத்திலிருந்து, விதிமுறைகளில் குறிக்கப்பட்டுள்ள செயல்முறையைப் பின்பற்றி உரிமை கோரலாம் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

இந்த அறிவிப்பு தொடர்பாக பங்குதாரர்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் மாற்ற முகவரைத் தொடர்பு கொள்ள: Integrated Registry Management Services Private Limited, SEBI பதிவு எண் INR 000000544, இரண்டாவது மாடி, கென்செஸ் டவர்ஸ், எண் 1, ராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017, தொலைபேசி : 044–28140801 – 03. மின்னஞ்சல் : srirams@integratedindia.in

சென்னை
ஜூலை 01, 2024

ரானே பிரேக் லைனிங் லிமிடெட்டிற்காக
வெங்கட்ராமன்
செயலாளர்

ரூ.180 கோடி வங்கி கடன் மோசடி வழக்கில் மல்லையாவுக்கு பிடிவாரன்ட்

● புதுடெல்லி

இந்தியாவின் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவராக கர்நாடகாவை சேர்ந்த விஜய் மல்லையா (68) இருந்தார். இவர் கடந்த 1978-ம் ஆண்டில் கிங் பிஷர் மதுபான நிறுவனத்தை தொடங்கினார். கடந்த 2005-ம் ஆண்டில் கிங் பிஷர் ஏர்லைன்ஸ் விமான சேவை நிறுவனத்தை தொடங்கினார். இவை தவிர பல்வேறு நிறுவனங்களை நடத்தி வந்தார்.

கடந்த 2011, 2012-ம் ஆண்டுகளில் கிங் பிஷர் ஏர்லைன்ஸ் நிறுவனம் மிகப்பெரிய சரிவை சந்தித்தது. இதன்காரணமாக கடந்த 2012-ம் ஆண்டில் கிங் பிஷர் விமான சேவைகள் நிறுத்தப்பட்டன.

கிங் பிஷர் ஏர்லைன்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களுக்காக இந்திய வங்கிகளில் ரூ.9,000 கோடி அளவில் விஜய் மல்லையா கடன் வாங்கியிருந்தார். அந்த கடனை திருப்பிச் செலுத்தாமல் கடந்த 2016-ம் ஆண்டில் அவர் பிரிட்டனுக்கு தப்பியோடிவிட்டார்.

வங்கிக் கடன் மோசடி தொடர்பாக அமலாக்கத் துறையும் சிபிஐயும் பல்வேறு வழக்குகளை பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன. இந்தியாவில் உள்ள விஜய் மல்லையாவின் சொத்துகள் முடக்கப்பட்டன. கடந்த 2019-ம் ஆண்டில் அவர், தப்பியோடிய பொருளாதார குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

கடந்த 2017-ம் ஆண்டு அக்டோபரில் பணப் பரிமாற்ற மோசடி வழக்கில் பிரிட்டிஷ் போலீஸார், விஜய் மல்லையாவை கைது செய்தனர். இந்த வழக்கில் தற்போது அவர் ஜாமீனில் வெளியே உள்ளார். அண்மையில் அவரது மகன் சித்தார்த்தா, ஜாஸ்மின் திருமணம் லண்டனில் நடைபெற்றது. இதில் விஜய் மல்லையா பங்கேற்றார்.

இந்த சூழலில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அவர் ரூ.180 கோடி கடன் வாங்கி மோசடி செய்த வழக்கு மும்பை சிபிஐ நீதிமன்றத்தில் அண்மையில் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த சிறப்பு நீதிபதி நாயக் நிம்பல்கர் முக்கிய உத்தரவினை பிறப்பித்தார். இந்த வழக்கில் விஜய் மல்லையாவுக்கு ஏற்கெனவே பலமுறை பிடிவாரன்ட் பிறப்பிக்கப்பட்டு உள்ளது. தற்போது ஜாமீனில் வெளிவர முடியாத பிடிவாரன்ட் பிறப்பிக்கப்படுகிறது என்று நீதிபதி நாயக் நிம்பல்கர் தெரிவித்தார்.

ரூ.1,000 கோடியை தொட்டது சிஜஇஎல் ஹெச்ஆர் வருவாய்

● சென்னை

சிஜஇஎல் ஹெச்ஆர் நிறுவனம், ஐடி, உற்பத்தி, வங்கி என பல்வேறு துறை சார்ந்த நிறுவனங்களுக்கு மனித வள சேவை வழங்கி வருகிறது. 2015-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நிறுவனத்தின் வருவாய் தற்போது ரூ.1,000 கோடியைக் கடந்துள்ளது.

இது குறித்து இந்நிறுவனத்தின் தலைவரும், முன்னாள் தமிழக அமைச்சருமான மா.ஃபா பாண்டியராஜன் கூறுகையில், "நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட 9 ஆண்டுகளில் ரூ.1,000 கோடி வருவாயை எட்டிப்பிடித்துள்ளோம். தவிர, பிரிட்டனைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பிராண்ட் பைனான்ஸ் நிறுவனம், தன்னுடைய சமீபத்திய அறிக்கையில் இந்தியாவின் வலுவான பிராண்டுகளில் ஒன்றாக சிஜஇஎல் ஹெச்ஆர் நிறுவனத்தை அங்கீகரித்துள்ளது. புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம் மற்றும் இத்துறை சார்ந்த நிறுவனங்களை கையகப்படுத்துதல் ஆகியவற்றின் வழியே இந்த வளர்ச்சி சாத்தியமாகியுள்ளது" என்று தெரிவித்தார்.

அதானி குழுமம் தொடர்பான அறிக்கை ஹிண்டன்பர்க் நிறுவனத்துக்கு செபி நோட்டீஸ்

● புதுடெல்லி

அதானி குழுமம் பங்கு முறைகேட்டில் ஈடுபட்டு வந்ததாக அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் நிறுவனம் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அறிக்கை வெளியிட்டது. இது தொடர்பான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தச் சூழலில், இந்திய பங்குச் சந்தை விதிகளை மீறிச் செயல்பட்டதாகக் கூறி, ஹிண்டன்பர்க் நிறுவனத்துக்கு இந்திய பங்குச் சந்தை ஒழுங்குமுறை வாரியமான செபி சில தினங்களுக்கு முன்பு நோட்டீஸ் அனுப்பியது. அதில், ஹிண்டன்பர்க் நிறுவனம் தனது அறிக்கையை பொதுவெளியில் வெளியிடுவதற்கு முன்பாக கிங்டன் கேபிடல் மேனேஜ்மெண்ட் என்ற முதலீட்டு நிறுவனத்துக்கு அனுப்பியுள்ளது என்றும் இதைத் தொடர்ந்து அந்நிறுவனம், அதானி குழுமப் பங்குகளை ஷார்ட் செல்லிங் செய்து லாபம் ஈட்டியுள்ளது என்றும் செபி குறிப்பிட்டுள்ளது.

இந்த நோட்டீஸுக்கு ஹிண்டன்பர்க் நிறுவனம் நேற்று அளித்த பதிலில், "அதானி குழும பங்குகள் கோடக் மஹிந்திரா வங்கியின் சர்வதேச பிரிவின் மூலமே ஷார்ட் செல்லிங் செய்யப்பட்டது. ஆனால், இந்த விவகாரத்தில் கோடக் மஹிந்திராவை பாதுகாக்கும் நோக்கில், தன் நோட்டீஸில் செபி அவ்வங்கியின் பெயரை நேரடியாகக் குறிப்பிடவில்லை" என்று தெரிவித்துள்ளது.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28332115, இணையதளம் : www.tvsholdings.com
மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com CIN : L35999TN1962PLC004792

அன்பார்ந்த உறுப்பினர்களே,

1. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015 மற்றும் அதன் கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013-ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜராகாமல் காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலமாக கம்பெனியின் 62-வது வருடாந்திர பொதுக்கூட்டம் **வியாழக்கிழமை 8 ஆகஸ்ட் 2024 அன்று** நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி, கம்பெனி அல்லது அவர்களின் சம்பந்தப்பட்ட முதலீட்டு பங்கேற்பாளர்களின் (டெபாசிட்டரி) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு 62வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் 31 மார்ச் 2024-ல் முடிந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் (வருடாந்திர அறிக்கை) ஆகியவை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பப்படும். காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் பங்கேற்கலாம். வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னணு வாக்குப் பதிவு மூலமாக வாக்களித்தல் அல்லது தொலைதூர மின்னணு வாக்குப் பதிவின் மூலம் பங்கேற்க மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்படும். கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் பங்கேற்குமு உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். கம்பெனியின் இணையதளம் www.tvsholdings.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளான பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளங்கள் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் இணையதளம் i.e. www.evoting.nsdl.comல் அறிவிப்பு பதிவேற்றம் செய்யப்படும். (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக அளிக்கப்பட்ட முகவர்).
3. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதவர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் ஸ்கேன் நகல்களை einward@integratedindia.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி 62வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல்கள், வருடாந்திர அறிக்கை மற்றும் அல்லது மின்னணு வாக்குப்பதிவு உள்பட காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) ஆகியவற்றை மென்பொருளாக பதிவு செய்வதன் மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   a. தங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம்.
   b. பங்கு சான்றுகளின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின் பக்கம்)
   c. சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட பான் மற்றும்
   d. உறுப்பினரின் ஸ்கேன் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட் / வங்கி அறிக்கை / ஆதார் ஆகியவற்றின் சுயசான்றளிக்கப்பட்ட செய்யப்பட்ட நகல்கள்.
4. மின்னணு கிளியரிங் சேவையை தங்கள் வங்கிக் கணக்குகள் மூலமாக நேரடியாக ஈவுத்தொகையைப் பெறுவதற்கான ஆணையை புதுப்பிக்காத காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கீழ்க்கண்ட விவரங்கள் / ஆவணங்களை, மேற்கண்ட பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மின்னஞ்சல் மூலம் einward@integratedindia.inக்கு அனுப்பி மின்னணு முறையில் அவர்களின் வங்கி கணக்கிற்கு ஈவுத்தொகையை நேரடியாக பெறுவதற்கு அவர்களது மின்னணு வங்கி ஆணையை பதிவு செய்ய வேண்டும்.
   a. ஈவுத் தொகை பெறக்கூடிய வங்கி கிளை, பெயர் மற்றும் வங்கி கணக்கு வகை
   b. கோர் வங்கி தீர்வுகளை அமல்படுத்திய பின்னர் அவர்களுடைய வங்கியால் ஒதுக்கப்பட்ட வங்கி கணக்கு எண்
   c. 11 டிஜிட் ஐஎஃஎஸ்சி குறியீடு மற்றும்.
   d. ஒரு வேளை பங்குகளை கூட்டாக வைத்திருந்தால் முதலில் வைத்திருப்பவர் அல்லது உறுப்பினரின் பெயர் கொண்ட ரத்தான காசோலையின் சுயசான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்
5. டீமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் அவர்களின் டெபாசிட்டரியிடம் அவர்களது மின்னஞ்சல் முகவரிகளை புதுப்பிக்க வேண்டும்.
6. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்கள் பங்குகளை டீமேட் முறைக்கு மாற்றி அதன் பயன்களை பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.
7. மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யும் செயல்முறையைத் தொடங்க டீமேட் கணக்கில் பங்குதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்களில் எஸ்எம்எஸ் அனுப்ப நிறுவனம் NSDL மற்றும் CDSL மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் இந்த வசதியைப் பெறவும், அதற்கேற்ப அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனிகள் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி மற்றும் கம்பெனியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல் மற்றும் நலனுக்கான மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டுக்காக
R. ராஜா பிரகாஷ்,
கம்பெனி செயலாளர்

சென்னை
ஜூலை 2, 2024

விற்பனை அறிவிப்பு

திவால்நிலை மற்றும் வங்கி திவால்நிலை விதி, 2016-ன்கீழ்

கோங்லு அக்ரோ பிரைவேட் லிமிடெட்

(கலைப்பு நிலையின்கீழ்)

CIN - U15500TN2013PTC090649

பதிவு அலுவலகம் : எண். 1B & 1C, சிவனந்தம் அப்பார்ட்மெண்ட்ஸ், 4வது தளம், 4A, கிழக்கு பார்க் சாலை, புல்லா அவெண்யூ, செனாய் நகர், சென்னை - 600030, தமிழ் நாடு.

தொழிற்சாலை வளாகம் : ஜெய்தாபூர், தாலுகா : சந்த்வாட், மாவட்டம் : நாஷிக் - 423117, மகாராஷ்ட்ரா.

வெப்பமண்டல பழங்களின் கூழ் உற்பத்தி, செறிவூட்டல் மற்றும் IQF லைன் (தனித்தனியாக விரைவு உறைந்த), இது உற்பத்தி மற்றும் வணிக வசதிகளைக் கொண்டுள்ளது.

நிலம் மற்றும் கட்டிடம், வாணியில் 3 பிளாட்ஸ் மற்றும் பிம்பால்கான் பஸ்வந்த், நாசிக்கில் 4 பிளாட்ஸ் மற்றும் ஒரு வர்த்தக இடம், பெருநிறுவன கடன்தாரர், M/s. கோங்லு அக்ரோ பிரைவேட் லிமிடெட் (கலைப்புக்கு உட்பட்டது) தொடர்பானவை "எங்கு எப்படி உள்ளதோ" என்ற அடிப்படையில் மாண்புமிகு NCLT, சென்னை அவர்களால் நியமிக்கப்பட்ட கலைப்பாளரால் விற்பனைக்கு வழங்கப்படுகிறது.

"https://bankauctions.in" இணையதளம் வழியாக விற்பனை நடைபெறும் (ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்புடன்).

மின்-ஏலம் நாள் : 30.07.2024

	சொத்து வகை/ விவரம்	விற்பனை முறை	பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் மற்றும் நேரம்	ரிசர்வ் தொகை	EMD தொகை	ஏலம் உயர்வு தொகை
வ. எண்.1	நிலம் & கட்டிடம்	எங்கு எப்படி உள்ளதோ என்ற அடிப்படை	05.07.2024 முதல் 11.07.2024 வரை	30.07.2024 காலை 11 மணி முதல் பகல் 1 மணிக்கு இடையில்	₹ 22.30 கோடி	₹ 2 கோடி	₹ 2 இலட்சம்
வ. எண்.2	வாணி & பிம்பால்கான் பஸ்வந்த், நாசிக்கில் 7 பிளாட்ஸ் மற்றும் 1 வர்த்தக இடம்	எங்கு எப்படி உள்ளதோ என்ற அடிப்படை	05.07.2024 முதல் 11.07.2024 வரை	30.07.2024 மாலை 2 மணி முதல் மாலை 3 மணிக்கு இட